Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்க இலக்கிய இசை மரபில் முத்தொள்ளாயிரமும் சிலப்பதிகாரமும்

**முனைவர் கோ.ப. நல்லசிவம்**
**இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

73

**ஆய்வுச்சுருக்கம்**

இசைக்கலை மனிதன் தோன்றிய காலந்தொட்டு உள்ளதாகும். இசை இசைவிப்பது. இசையைப் பண் எனவும் பழந்தமிழர் குறித்தனர், பண் பண்ணப்படுவதோடு மட்டுமல்லாமல் மனிதனைப் பண்படுத்துவது . அதனால் இசை என்பது இயலுக்கு அடிப்படையாகவும் நாடகத்திற்கு முன்னோடியாகவும் விளங்கியது எனலாம். இயற்றமிழுக்கு ஓசை மற்றும் சந்தத்தை வழங்குவது அதனூடாக இயங்கும் இசையெனில் அது மிகையன்று. பழந்தமிழகத்தில் பெருநாரை. பெருங்குருகு எனும் இசை நுடீல்கள் இருந்து அழிந்துபட்ட செய்தியை நாம் அறிவோம். ஓசை என்பது ஒரு ஓழுங்குமுறைக்குக் கட்டுப்படும் போது அது இசையாகிறது. இசை என்பதற்குப் பொதுவாக புகழ் என்று பொருள் குறிப்பர். சங்க காலந்தொட்டு இசையானது இயலுக்குச் சந்தமாகவும், நாடகத்திற்குப் பாடலாகவும் விளங்குகிறது. அதனால்தான் முத்தமிழில் இசைத்தமிழை நடுவாக வைத்தனர். நடுவனது எய்த இருதலையும் எய்தும் அல்லவா. தமிழிலக்கியத்தில் அதிகம் பார்க்கப்படாத இலக்கியம் முத்தொள்ளாயிரம், அதிகமாகப் பேசப்படும் இலக்கியம் சிலப்பதிகாரம். இந்த இரண்டிலும் சங்க இசை மரபின் தாக்கம் காணப்படுவதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**திறவுச்சொற்கள்**

சங்க இலக்கியம், முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், ஏழிசை, பேரியாழ், இசைக்கலை, சுரங்கள்,இசை மரபு, யாழ்மரபு, வரிப்பாடல்கள், வள்ளைப்பாட்டு, வாழ்த்துப்பாட்டு, பண், பண்ணாங்கம், தமிழ்ப்பண்கள் 103, சங்க இசை மரபு, செவ்விசை.

## முன்னுரை

இசையாவது மனிதனை மட்டுமல்லாமல் எல்லா உயிரினங்களையும் இசைவிப்பது ஆதலான் இது இசையெனப்பட்டது என்பர். இசை என்பது பல்திறத்தால் வெளிப்படும்போது அது பண்ணாகிறது. பண் என்பது பண்பட்ட/ பக்குவப்பட்ட இசையைக்குறிப்பதாக அமைகிறது. பண்கள் பல வகைகளாகப் பிரிந்து வளர்ந்துள்ளன. பிற்றை நாளில் இப்பண்களை இராகங்கள் என்று கர்னாடக இசையில் குறிக்கத் தொடங்கினர். ஆயின் தேவார மூவர் காலம் வரை இவை பண்கள் என்றே அழைக்கப்பட்டன.

இசை என்பதை வாரம் என்ற சொல்லாலும் குறிப்பர். அதனால் தான் பிற்றை நாளில் தோன்றிய இறைவனைப் பற்றிய இசைப்பாடல்களுக்கு தேவாரம் என்ற பெயர் உண்டாயிற்று. வாரம் என்ற இசைப்பாட்டு வகையைத் தொல்காப்பியர் குறித்துள்ளமை இசையின் வளமார்ந்த பழமையைக் குறிப்பதாக உள்ளது. திணைக்குரிய கருப்பொருள்களில் பண்ணும், யாழும், பறையும் அழுத்தமாக ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியே (குறிஞ்சிப் பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற் பண்,

பாலைப்பண் ) பதிவு செய்யப்பட்டுள்ளன.

குரல் ,துத்தம் கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம் எனும் இசைத்தமிழின் ஏழு அடிப்படைகளே பிற்காலத்தில் கர்னாடக இசைக்கு ஏழு சுரங்களாயின(ஸ ரி க ம ப த நி) என்பதை நுண்ணிதின் உணரவேண்டும். இதனை

**குரலே துத்தம் கைக்கிளை உழையே**
**இளியே விளரி தாரம் என்றிவை**
**எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே**

என்று திவாகர நிகண்டு குறிக்கிறது. தொல்காப்பியர்,

**முதலொடு புணர்ந்த யாழோர் மேன**
**தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே** [1]

**மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்**
**துணையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே**[2]

**அளவிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்.** [3]

எனவரும் நூற்பாக்களின் வழி இசை குறித்த செய்திகளைப் பதிவுசெய்கிறார். மேலும் பா என்பதற்கு விளக்கம் கூறுமிடத்து பா எனப்படுவது இசை வழிப்பட்டதே என்று செய்யுளியலில் விளக்குகிறார். அசையும் சீரும் இசையொடு சேர்த்தி என்பது செய்யுளியல் (10) நூற்பாவாகும். செய்யுளியல் இயற்பாவுக்கு இலக்கணம் கூறும் இயல் என்பதை மட்டும் நோக்காமல், வண்ணம், வனப்பு என வருமிடங்களைக் கூர்ந்து கவனித்தால் இசைப்பாவிற்கும் அது இலக்கணம் பகர்வதை உணரலாம்.

சங்க இலக்கியங்களில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல் என்பன நேரிடையாக இசையோடு தொடர்புடையனவாக உள்ளன. இசை வழிப்பறி செய்யும் கொலைத் தொழில் உடையவனையும் உருக்கும் இயல்புடையது எனப் பொருநராற்றுப்படை(8) குறிப்பிடுகிறது. தலைவி ஒருத்தி குறிஞ்சிப்பண் பாடி பெருங்களிற்றையே உறங்கச்செய்த செய்தி அகநானூற்றில் இடம்பெறுகிறது. அப்பாடல்,

**ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும்** -[4] என்பதாகும். யாழ் என்ற நரம்பிசைக்கருவியைக்கொண்டு பண்ணமைத்தவர்கள் யாழ்ப்பாணர்கள் என்றழைக்கப்பட்டனர். குறிஞ்சிப்பண் இசைக்கும் வேளை யாமம் என்பதும், பாலைப்பண் இசைக்கும் போது நண்பகல் என்பதும், முல்லைச்சாதாரிப்பண் இசைக்கும் வேளை மாலை என்பதும், மருதப்பண் இசைக்கும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பொழுது விடியல் என்பதும், நெய்தல் விளரிப்பண் இசைக்கும் வேளை எற்பாடு (காலை) என்பதும் பண்டைத் தமிழர் வகுத்த இசை நெறிகளாகும். யாழில் பேரியாழ் (32 நரம்புகளைக்கொண்டது), மகர யாழ், சகோட யாழ், குறிஞ்சி யாழ், முல்லை யாழ், மருத யாழ், பாலை யாழ், விளரியாழ் எனப் பல வகைகளைக் காணமுடிகிறது. மேலும் தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, மணமுழவி, மீன்கோட்பறை என்ற தோற்கருவிகளும் இருந்தன. குரலிசைக்குத் தகுந்த வண்ணம் யாழும் யாழிசைக்கு ஏற்ப, குழலும் இவை மூன்றுக்கும் ஏற்ப ஆடலும் கூத்தும் அமையும். தம்முடைய அவயவங்களால் மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துவோர் விறலியர் என்றும், கூத்து எனம் நாடகத்தால் நடித்துக் காட்டுவோர் கூத்தர் என்றும் அழைக்கப்பட்டனர். தொல்காப்பியம்,

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்** [5]

என ஆற்றுப்படை எனும் சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறுமுகத்தான் மேற்கண்ட இசையியல் வல்லுநர்களைப் பதிவு செய்கிறது.

**முத்தொள்ளாயிரம்**

மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டிய மன்னர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட செவ்விலக்கியம் முத்தொள்ளாயிரம் என்றழைக்கப்பட்டது. ஆயின் இன்று நமக்குக் கிடைத்தவை 108 நேரிசை வெண்பாக்களேயாகும். இவ்விலக்கியத்தை இரா.இராகவையங்கார் முதற்பதிப்புச் செய்து வெளியிட்டார்.

**இன்தமிழ்ப்பாட்டு**

முத்தொள்ளாயிரம் தமிழை/ தமிழிசையை இனிமையானது என்று அழகாகப் பதிவு செய்கிறது. பின்னாளில் இன்தமிழ் மாலை, ஏழிசை இன்தமிழ், இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன், என்றெல்லாம் தேவாரத்தால் ஆளப்படுகின்ற சொற்களுக்கெல்லாம் மூலமாக முத்தொள்ளாயிரத்தில் வரும் பின்வரும் பாடல் திகழ்கிறது எனில் அது மிகையன்று.

**மடங்கா மயில்ஊர்தி மைந்தனை நாளும்**
**கடம்பம்பூக் கொண்டேத்தி அற்றால் - தொடங்கமருள்**
**நின்றிலங்கு வென்றி நிரைகதிர்வேல் மாறனை**
**இன்தமிழால் யாம்பாடும் பாட்டு –** [6]

என்ற பாடல் மேற்சொன்ன கருத்தை நிறுவும். மேலும் இப்பாடலில் முருகன் தமிழ்க்கடவுள் எனவே அவனை இன்தமிழால் பாடிப்பரவ வேண்டும் என்ற குறிப்பும் அமைந்துள்ளது.

**வள்ளைப்பாட்டு**

வள்ளைப்பாட்டு என்பது வாழ்த்திப்பாடும் பாடலாகும். சிலப்பதிகாரத்தில் வள்ளைப்பாட்டு வாழ்த்துக்காதையில் நான்கு பாடல்களாக இடம்பெறுகின்றன. முத்தொள்ளாயிரத்தில் வள்ளைப்பாட்டாக,

**கொடிபாடித்தேர்பாடிக் கொய்தண்தார் மாறன்**
**முடிபாடி முத்தாரம் பாடித் - தொடியுலக்கை**
**கைம்மனையில் ஓச்சப் பெறுவெனோ? யானும்ஓர்**
**அம்மனைக் காவல் உளேன். -**[7]

எனவரும் பாடல் பாண்டியனைப் புகழ்ந்து வாழ்த்துவதாக அமைந்துள்ளது. பின்னாளில் அரசனின் பத்து உறுப்புகளைப்பாடும் தசாங்கப்பாடலாக மேற்கண்ட வகை அமைந்திருப்பதாகக் கருத இடமுண்டு.

**முத்தமிழ்**

தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாகப் பார்க்கும் மரபு நம்முடையது. இம்மரபிற்கு அடிப்படையாக தமிழ்மொழியில் இயல் நூலாக இருந்தாலும் இதில் இசையியலும் நாடகத் தன்மையும் இயையக் காணமுடியும். தொல்காப்பியர், உலக வழக்கினும் நாடக வழக்கினும் பாடல் சான்ற புலனறி வழக்கம் என்று குறிப்பிடுவார். எனவே இசையும் நாடகமாகிய கூத்தும் இயலோடு இணைந்தவையாகும். பாண்டிய நாடு சங்கம் வைத்தும் முத்தமிழை வளர்த்த பெருமையுடையது. மூவேந்தர்களும் தமிழின் மீது ஆறாக்காதல் கொண்டிருந்தனர் என்றாலும் தண்தமிழ்ப்பாண்டி நாடு என்ற பெருமை மதுரை மண்ணாகிய பாண்டிய நாட்டையே சாரும். முத்தொள்ளாயிரத்திலும் சேர, சோழ மன்னர்களுக்குச் சொல்லாத சிறப்பை, பாண்டியனுக்குச் சொல்லப்படுகிறது. அச்சிறப்பு முத்தமிழ்ச் சிறப்பே. சான்றாக,

**பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூல்**
**நீர்படுப வெண்சங்கும் நித்திலமும் - சாரல்**
**மலைபடுப யானை வயமாறன் கூர்வேல்**
**தலைபடுப தார்வேந்தர்மார்பு –** [8]

என்ற பாடல் வழி முத்தமிழ் செழுமையாகப் பாண்டிய நாட்டில் விளங்கிற்று என்ற சிறப்பை அறிய முடிகிறது. பாண்டிநாடு முத்துடைத்து என்ற சிறப்பை விடவும் முத்தமிழுடைத்து என்பது உயர்வானதாக முத்தொள்ளாயிரம் வழி அறியமுடிகிறது.

சிலம்பில் வரிப்பாடல்கள் மேற்கண்ட இசைவடிவத்தின் வளர்ச்சி பெற்ற வடிவமாகக் கருதலாம். வரி என்ற சொல் தமிழில் கோடு, மடிப்பு, வளை, வங்கு என்று பல பொருள்களில் வழங்கப்படுகிறது. சிலம்பில் இசைப்பா வகைகளுள் ஒன்றாகவும், கூத்து வகைகளுள் ஒன்றாகவும் வரி குறிக்கப்பெறுகிறது.

சிலப்பதிகாரத்தில் வரி என்ற சொல்லுடன் நிறைவடையும் பகுதிகள் வரிப்பாடல்கள் எனப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் முப்பது காதைகளில் மூன்று காதைகள் வரி என்ற சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளன. அவை கானல் வரி, வேட்டுவ வரி, ஊர்சூழ் வரி என்பனவாகும். கானல் வரி முழுமையும் இசைப்பாடல்களாகவும், வேட்டுவ வரி கூத்து தொடர்பான பாடல்களாகவும், ஊர்சூழ் வரி மதுரை நகர மக்களை நோக்கிப்பாடும் பாடல்களாகவும் குறிப்பாக நாடகப்பாங்குடையதாகவும் விளங்குகின்றன. வரிப்பாடல் என்பதற்கு விளக்கமாக,

“வரிப்பாடலாவது பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியான் மயங்கச்

சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன்முதலும் இறுதியும் கெட்டும் இயல்பும் முடமுமாய் முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வஞ் சுட்டியும், மக்களைப் பழிச்சியும் வரும்" என்பதை அரும்பத உரையாசிரியர் குறிக்கிறார். இதிலிருந்து வரிப்பாடல்களை தெய்வஞ்சுட்டிய வரிப்பாடல்கள், மக்கள் சுட்டிய வரிப்பாடல்கள் என்று இருநிலைகளாகப் பகுக்கலாம் என்பதும், வரிப்பாடல்கள் இசைப்பாடல் வகையைச் சார்ந்தன, பண்சுமந்த பாடற் தன்மை கொண்டன, பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியின்றி பல நெறிகளால் வரும் இயல்பின, எட்டன் இயல்பும், ஆறன் இயல்பும் ( தாள வகைகள் ) பெற்று வருவன, தன் முதலும் இறுதியும் கெட்டும், இயல்புமாகவும் வரும், முடமாகவும் வரும் சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாமலும் வரும் என்பனவும் பெறப்படுகின்றன.

இதிலிருந்து வரிப்பாடல்களை தெய்வஞ்சுட்டிய வரிப்பாடல்கள், மக்கள் சுட்டிய வரிப்பாடல்கள் என்று இருநிலைகளாகப் பகுக்கலாம் என்பதும், வரிப்பாடல்கள் இசைப்பாடல் வகையைச் சார்ந்தன, பண்சுமந்த பாடற் தன்மை கொண்டன, பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியின்றி பல நெறிகளால் வரும் இயல்பின, எட்டன் இயல்பும், ஆறன் இயல்பும் ( தாள வகைகள் ) பெற்று வருவன, தன் முதலும் இறுதியும் கெட்டும், இயல்புமாகவும் வரும், முடமாகவும் வரும் சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாமலும் வரும் என்பனவும் பெறப்படுகின்றன.

**கானல் வரி**

கோவலன் மாதவி இடையே ஊடலை ஏற்படுத்தி கதையின் திருப்பு முனையாக அமைந்த பகுதி கானல் வரியாகும். இதில் இடம்பெறும் வரிப்பாடல்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. ஆற்று வரி
2. முகச்சார்த்து
3. முகமில் சார்த்து
4. கானல் வரி
5. நிலைவரி
6. முரிவரி
7. திணைநிலை வரி
8. மயங்கு திணைநிலை வரி
9. சாயல் வரி

இவை ஒன்பதுமாகச் சேர்ந்து கானல் வரியில் 48 பாடல்களாக உள்ளன.வேட்டுவ வரி இவை ஒன்பதுமாகச் சேர்ந்து 23 பாடல்களாக வேட்டுவரி எனும் கூத்துப்பாடல்கள் அமைந்துள்ளன. இவை தவிர ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய பகுதிகளிலும் வரிப்பாடல்கள் அமைந்துள்ளன.

**வரிப்பாடல்களும் இசையியலும்**

சிலம்பில் காணப்படும் மேற்கண்ட வரிப்பாடல்கள் மிகச்சிறந்த தமிழரின் இசைமரபையும் செழுமையான இசை இலக்கண வகைகளையும் நமக்குத்தருவனவாக அமைந்துள்ளன. கானல் வரியில் கோவலனும் கண்ணகியும் காவிரி ஆற்றைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் ஆற்றுவரிப்பாடல்களாக அமைந்துள்ளன. இவை ஒழுகியல் வண்ணம் என்கிற சந்த அமைப்பில்

உள்ளன. காவிரி என்ற சொல் இசையியலுக்கு ஏற்ப இக்காதை முழுவதும் காவேரி என நெட்டிசை பெறுகிறது ( அளவிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும், உளவென மொழிப இசையொடு சிவணிய, நரம்பின் மறைய என்மனார் புலவர். - தொல்.33) சான்றுகளாக,

**திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோல் அது ஓச்சிக்**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாது ஒழிதல் கயல்கண்ணாய்**
**மங்கை மாதர் பெருங்கற்பு என்று அறிந்தேன் வாழி காவேரி.**[9] (என்ற பாடல்களைக்காட்டலாம். மேற்கண்ட பாடல்களை அடிப்படையாகக் கொண்டே திருவாசகத்தில் மாணிக்கவாசகர் திருச்சாழல் எனும் பகுதியைப் பாடியிருப்பது ஈண்டு ஒப்ப நோக்கத்தக்கதாம்.

**முரி வரி**

முரி வரி என்பதற்கு அரும்பத உரையாசிரியர்,

**எடுத்த இயலும் இசையும் தம்மில்**
**முரித்துப்பாடுதல் முரியெனப் படுமே.**

என்று அழகான விளக்கம் தருகிறார். சிலப்பதிகாரத்தில் மூன்று பாடல்கள் முரிவரிப்பாடல்களாக அமைந்துள்ளன. சான்றுகளாக,

**பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே**
**பழுதறு திருமொழியே பணைஇள வன முலையே**
**முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே**
**எழுதரு மின்இடையே எனைஇடர் செய்தவையே,** [10]

என்பனவற்றைச் சுட்டலாம். இம்முரிவரியே பிற்காலத்தில் திருஞானசம்பந்தர் பாடிய யாழ்முரி எனும் பண்ணுக்கு அடிப்படையாக இருந்திருக்கலாம் எனக் கருத இடம் உள்ளது. இப்பதிகம் முழுவதும் இம்முரிவரி அமைப்பிலேயே பாடப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**துள்ளல் வரி**

துள்ளல் ஓசையுடைய பாடல்கள் துள்ளல் வரிப்பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. உலக்கையை கையால் பற்றி உரலில் இடிக்கும் வேளையில் பாடுகின்ற சந்தத்தில் இப்பாடல் அமைகிறது. இதனை வள்ளைப் பாட்டெனவும் குறிப்பிடுவர். சிலப்பதிகாரத்தில்,

**பவள உலக்கை கையால் பற்றித்**
**தவள முத்தம் குறுவாள் செங்கண்**
**தவள முத்தம் குறுவாள் செங்கண்**
**குவளை அல்ல கொடிய கொடிய** [11]

என இவ்வகை வரிப்பாடல்கள் இடம்பெறுகின்றன.

**மயங்கு திணைநிலை வரி**

சிலப்பதிகாரத்துள் மாதவி பாடியதாக இடம்பெறும் பாடல்களில் மயங்குதிணைநிலை வரிப்பாடல்கள் இடம்பெறுகின்றன. இவை சகானா எனும் இராகத்தில் பாடற்குரியன என்பர்

இசையியலார். சான்றாக,

**இளை இருள் பரந்ததுவே எல்செய்வான் மறைந்தனனே**
**களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே**
**தளைஅவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட்டு உளதாம்கொல்**
**வளைநெகிழ எரிசிந்தி வந்தஇம் மருள்மாலை?** [12]

எனவரும் பாடலைச் சுட்டலாம்.

**அம்மானை**

அம்மானை என்பது பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டு வகையாகும். கழங்கு இதன் மற்றொரு வடிவமாகும். பிற்காலத்தில் பெண்பாற்பிள்ளைத்தமிழ்ப் பருவங்களில் ஒன்றாக இது பேசப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக்காதையில் அம்மானைப் பாடல்கள் இடம்பெறுகின்றன. சான்றுகளாக,

**வீங்குநீர் வேலியுலகாண்டு விண்ணவர்கோன்**
**ஓங்கரணங் காத்த வுரவோன்யார் அம்மானை**
**ஓங்கரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்**
**தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காண் அம்மானை**
**சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை.** [13]

இப்பாடல் வகையே பிற்காலத்தில் திருவாசகத்தில் அம்மானைப்பாடல்களாக இடம்பெற்றன எனலாம்.

**கந்துக வரி**

கந்துகம் என்பதும் பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்றேயாகும். இது பாடிக்கொண்டே பந்தாடுதலைக் குறிப்பதாகும். சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக்காதையில் கந்துக வரிப்பாடல்கள் இடம்பெறுகின்றன.

**பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட**
**மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்**
**தென்னன் வாழ்க வாழ்க என்றுபந்தடித்துமே.**
**தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே..** [14]

என்ற பாடலைக் காட்டலாம். இப்பாடல்களும் சந்தமும் பிற்காலத்தில் குறவஞ்சி எனும் சிற்றிலக்கிய வகையுள் பந்தாட்டப்பாடல்களாகவும் இடம்பெற்றன எனலாம். சான்றாக, திரிகூடராசப்ப கவிராயர் பாடிய திருக்குற்றாலக்குறவஞ்சிப்பாடல்களைக் குறிப்பிடலாம். இச்சந்தத்தில் பிற்காலத்தில் வள்ளலார், பாரதியார், பாரதிதாசன், அண்ணாமலை ரெட்டியார், கண்ணதாசன் போன்ற பலரும் பாடல்களை இயற்றியுள்ளனர்.

**தொகுப்புரை**

சங்க இசை மரபு தனித்துவம் வாய்ந்தது. இயற்கையோடு இயைந்தது. தமிழர் வாழ்வை

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இசையிலிருந்து பிரிக்கவியலாது. எனவேதான் இசையோடு வாழ்தலாகிய வாழ்க்கையே புகழுடையது என்ற கருத்தால்தான் பிற்றைநாளில் புகழ் என்பதையே இசையென வள்ளுவம் குறிக்கிறது. ஈதல் இசைபட வாழ்தல் என்பது அக்குறட்பா. சங்க இலக்கியம் தமிழர்தம் வாழ்வியல் சடங்குகளில் இசைபெறும் இடத்தைக் கவனமாகப் பதிவுசெய்துள்ளது. இப்பின்னணியில் எழுந்த முத்தொள்ளாயிரம் கலி, பரிபாடல் என்ற இசைப்பா வகையில் அமையாமல் வெண்பா வடிவத்தில் அமைந்த காரணத்தால் இசையின் செல்வாக்கை முழுமையாக அதில் காண முடியவில்லை. முத்தொள்ளாயிரத்தில் சேரன், சோழன் குறித்த பாடல்களில் இசை குறித்த செய்திகளை அறிய முடியவில்லை/ அல்லது அப்பாடல் அழிந்துபட்டிருக்கலாம்/அழிக்கப்பட்டிருக்கலாம். தமிழிசையின் தொன்மையை, தமிழின் தொன்மையை/ தமிழினத்தின் தொன்மையைப் பாதுகாத்து வைத்திருந்த யாழ் நுூலகம் அழிக்கப்பட்டது போல முத்தொள்ளாயிரத்திலும் மன்னனின் வெற்றி, புகழ், கொடை, வீரம் என்ற பாடல்களை மட்டும் வைத்து தமிழ் மக்களின் இசையை, வாழ்க்கையை, வரலாற்றை அழித்திருக்கலாம்.

**நிறைவுரை**

103 பண் கண்ட தமிழிசையில் இன்று வழக்கத்தில் இருப்பவை 24 பண்களே என்ற அவல நிலை உள்ளது. அதுவும் தமிழிசையை, சங்கத்தமிழர் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்த திருமுறைகளிலும், திவ்விய பிரபந்தப் பாடல்களிலுமே கிடைக்கிறது. இவற்றையும் இழந்தால் தமிழிசையின் தனித்துவம் காலத்தால் கரைந்து போகும் என்பது திண்ணம். எனவே தமிழிசை காப்பாற்றப்படவேண்டும் என்பது ஒவ்வொரு தமிழனின் தலையாய கடமை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டிய தருணம் இது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல். நூ,1059
2. தொல்,நூ.1035
3. தொல்.நூ. 33
4. அகநானூறு பா. 102
5. தொல்.நூ. 1034
6. முத்தொள்ளாயிரம் பா. 90
7. முத்தொள்ளாயிரம் பா. 69
8. முத்தொள்ளாயிரம் பா. 87
9. சிலம்பு. ஆற்றுவரி 1
10. மேலது. கானல் வரி 14
11. மேலது. கானல் வரி 21
12. மேலது. கானல் வரி 40
13. மேலது. வாழ்த்துக்காதை 16
14. மேலது. வாழ்த்துக்காதை 20-22

**துணைநூற்பட்டியல்**

1. முத்தொள்ளாயிரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு 2002
2. சிலப்பதிகாரம், அரும்பத உரையாசிரியர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1995
3. குகேசன் (ப.ஆ) மூவர் தேவாரம், அலமு, சென்னை, இரண்டாம் பதிப்பு 2022
4. மாணிக்கம் (உ.ஆ) அகநானூறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1999